දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපැල
மின் - அஞ்சல்
E-mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/EST/02-05/07/2021

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2023.12.

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை : 05/2020 (i)

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,

**நிறைவேற்று மற்றும் சிரேஷ்ட நிறைவேற்று சேவை வகுதிகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள் அல்லது/மற்றும் சேவைப் பிரமாணக்குறிப்புக்கள் பிரகாரம் விசேட தரத்திற்கு மற்றும் முதலாம் தரத்திற்குப் பதவியுயர்த்துவதற்குப் பட்டப்பின் படிப்புப் பட்டத் தகைமையை ஏற்புடையதாகக் கொள்ளல்**

பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இற்கு அமைவாக நிறைவேற்று மற்றும் சிரேஷ்ட நிறைவேற்று சேவை வகுதிகளுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணக்குறிப்புக்கள் பிரகாரம் அத்தகைய சேவை வகுதியொன்றிற்கு ஆட்சேர்ப்பு செய்தல், குறித்த சேவை வகுதியின் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் பதவியுயர்வு போன்ற சந்தர்ப்பங்களுள் ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் பட்டப்பின் படிப்புப் பட்டமானது ஒரு தகைமையாகத் தேவைப்படுமாயின், மேற்குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர் ஒருவரின் தகைமையொன்றாகக் கருதப்படும் பட்டப்பின் படிப்புப் பட்டமானது, ஏற்புடைய சேவைப் பிரமாணக்குறிப்பில் அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடத் தேவைப்பாடுகளை முழுமையாகப் பூர்த்தி செய்யுமாயின், அடுத்துவரும் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையின் போது மற்றும்/அல்லது பதவியுயர்வின் போதும் தகைமையொன்றாகக் கருதுவதற்குத் தடையாக அமையாது.

02. அதற்கமைய 05/2020 ஆம் இலக்க மற்றும் 2020.06.18 ஆம் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்குப் பதிலாக, இதுவரை குறித்த சுற்றறிக்கையின் கீழ் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில்,2023.12.11 ஆம் திகதி முதல் மேற்குறித்த ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன

செயலாளர்

அரசாங்க சேவை ஆணைக்குழு